# மரபுப் பண்பாட்டுக் கோலத்தில் பெண்

சுபதினி ரமேஷ்

மரபு என்பது பழமை என்ற பொருள் தரும். மரபு என்பது சமூக விஞ்ஞானிகள் பின்வருமாறு விளக்கந் தருகிறார்கள். ப தலைமுறை, தலைமுறையாக சேர்ந்து கற்பித்துக்கொ நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும், நடத்தை முறைகளும் ே ஓர் அம்சமே மரபு எனப்படும். இது ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒன்றாக, ஒரு சமூகத்தினரின் பண்பாட்டைக் கட்டிக் காப்பத உருவாக்கப்பட்ட ஒரு நடைமுறையாகும்.

மரபுவழி வந்த பண்பாடென்பது மனிதன் தோ காலத்திலிருந்தே அவனது குருதியோடு நிலைபெற்ற ஒன்றாகி இ வருகிறது. மரபு பழக்கவழக்கங்கள் சமூகத்திலும், குடும்பத் கற்பிக்கப்பட்டு வருவதனால் அவை மனதில் வேரூன்றி விடுகின் இம்மரபுப் பழக்கவழக்கங்கள் ஒவ்வொரு சமூகத்திலும் ஆ வேறாகவும், பெண்ணுக்கு வேறாகவும் வடிவமைக்கப்பட்டு அத நின்று ஒழுகுவது சமூகக் கடமையாகிறது. அதுமட்டுமின்றி சமூ இருபாலார்களின் அந்தஸ்தும், ஒவ்வொருவரின் நிலையும் வெவ் வரையறுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மரபுப்பண்பாடு இருபாலார்க்கும் உரியனவாக இருந் பெண்களிடந்தான் இதன் அவசியம் வலியுறுத்தப்படுகி ஆண்களிடம் இதனை எதிர்பார்ப்பதில்லை. ஆனால் சமுதா பெண் என்பவளே அதைக் கட்டிக் காப்பவளாகவும், ம பேணுபவளாகவும் நம்பப்படுகிறாள். பெண் என்பவளின் வாழ்க் பிறப்பு, வளர்ப்பு, உணவு, உடை, நடத்தை, திருமணம், குடும்பப் பெ என்ற பலவகை அம்சங்கள் அவளை மரபுக் கட்டுப்பாட்டுக்குள் அ வைத்திருக்கிறது. சொத்து என்று குறிப்பிடும்போது, குறிப்பாக இ சமுதாயத்தில் ஆண்பிள்ளைக்கே முழுமையாகச் சேரவேண்டும் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் யாழ்ப்பாண சமுதா சொத்து என்பது பெண்களுக்கேயுரியதாகவும், விருப்பத்தின் ஆண்பிள்ளைகளுக்கும் கொடுக்கலாம் என்பதும் மரபாகும்.

மரபு ரீதியான பண்பாட்டில் பெண்ணை வைத்து பல பழமொழிகள் அறிஞர்களால் கூறப்பட்டுள்ளன. ஆனால் அவை அனைத்துமே பெண்ணை அடிமைப்படுத்தி, சமூகத்தை கணவனைச் சார்ந்து வாழுவதையே வற்புறுத்துகின்றன. அதற்கு சில உதாரணங்களைக் கீழே பார்க்கலாம்.

*நாட்டுக்கு அவள் ராணியா இருந்தாலும்*
*வீட்டுக்கு அவள் பெண்டாட்டிதானே.*

*அடுக்களைக்கு ஒரு பெண்ணும்*
*அம்பலத்திற்கு ஒரு ஆணும்*

எனவே பெண் என்பவள் மரபுப் பண்பாட்டுக்கு ஏற்ப, விதிக்கப்பட்ட பழக்கவழக்கங்களைப் பின்பற்றி அடங்கி, ஒடுங்கி வாழவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

மரபு ரீதியாக பெண்களை அறியாமையுடையவர்களாக வர்ணிப்பது சமூகத்தின் கொடுமையாகும். ஏனெனில் படிப்பதனால் அறிவு வளர்ந்து குடும்பத்தில் பெண்ணின் நிலை மேலோங்கி விடும் என்ற அச்சம் சமூகதத்தில் நிலவுவதால் அவள் முட்டாளாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். இது மரபு ரீதியான ஒரு பண்பாடாகும். இப்பண்பாட்டை உடைத்து சமூகத்தில் பெண் அறிவு பெறுவதால் குடும்பத்தையும், சமூகத்தையும் பெண் தன்னால் உயர்த்துகிறாள் என்பதை உலகம் நம்ப மறுக்கிறது. இந்த அறியாமையை மென்மேலும் மெருகூட்டுகிறது அக்காலத்தைய பழமொழிகள்

*அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு*

என்ற வாக்கியத்திற்கு இணங்க பெண்ணை சிறு வயதிலிருந்தே கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால் இயல்பாகவே அவள் மனதில் ஒரு தாழ்வுணர்ச்சியை உருவாக்குகிறார்கள். அத்தகைய உளவியல் தாக்கங்கள் மரபு ரீதியாகவே இருந்துகொண்டு வருகின்றன.

மரபு ரீதியான பண்பாட்டில் மரபுத் தொடர்களின் பங்கும் முக்கியத்துவம் பெறுவதைப் பின்வரும் தொடர்களின் மூலம்

உணர்ந்துகொள்ள முடியும். அல்லி ராச்சியம் எனும்போது பெண்க கை ஓங்கியிருக்கும் நிலையை வெளிப்படுத்துகிறது.

சொக்குப்பொடி போடு...... பெண் ஒருத்தி தன் கணவ மயக்கி, மாமியாருக்குக் கோபத்தை உண்டாக்குவதை மறைமுகம குறிப்பிடுதலைக் குறிக்கும்.

தளுக்கிக் குலுக்கி மினுக்கு...... ஒரு குடும்பப் பெண் சி ஆடம்பரமாக ஆடை உடுத்துவதை இவ்வாறு வர்ணிக்கப்படும். மே மினுக்கி.....பகட்டான ஆடை அணிந்து வெற்றுப் பேச்சு பேசி திரி பெண்களை இவ்வாறு அழைக்கப்படும்.

இத்தகைய பெண்ணை இழிவுபடுத்தி, அவளை சமுதாயத் தாழ்த்தி பேசப்படும் பண்பாட்டை மரபு ரீதியான பழக்கவழக்கங்கள அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு மரபுப்பண்பாட்டுக் கோலத் பெண்ணின் நிலையைப் புலப்படுத்தும் பாங்கு மிகவும் வேதனைக்குரி

பல சமூகத்தினரிடம் காணப்படும் இன்னுமோர் பண்ப பெண்களைப் பொறாமையுடையவர்களாக எடுத்துக்காட்டுவதா இந்தியாவில் தமிழ் நாட்டு சமூகத்தினரிடம் காணப்படும் இப்ப மாமியார்-மருமகள், நாத்தனார்-அண்ணி போன்ற உறவு முறைக பெண்ணுகளே பெண்ணை எதிரியாக்குகின்றன. இத்தகை பகைமையுணர்வை மென்மேலும் தூண்டிவிடத்தக்கவனாக அன்ற பழக்கவழக்கங்களில் காணப்படும் நிகழ்வுகள் காரணமாகின்ற இவ்விடத்தில் மரபுப் பண்பாட்டைக் காரணங் காட்டி காலங் காலம பெண்களை அடிமைத் தனத்திற்குள் கொண்டு செல்கின்றார்கள். அன்ற நடைமுறை வாழ்க்கையில் தமிழ் மரபைப் பொறுத்தவரை ஆண்களி மரியாதையைப் புலப்படுத்துதல், எழுந்து நிற்றல், சமமாக நின் உரையாடுதல் மறுக்கப்பட்டுள்ளமை, புடவையால் போர்த்தி, தலை குனி நிற்றல், கதவுக்குப் பின்னால் நின்று உரையாடுதல் போன்ற பல அம்சங்களி யாழ்ப்பாண சமூகம் வேறுபடுகிறது. இந்தளவிற்குப் பழக்கவழக்க மரபு ரீதியாகப் பேணப்படுவது யாழ்ப்பாணப் பெண்களிடம் குறைவ இருந்தாலும் மரியாதை எந்தளவுக்கு சமூகத்திலோ, குடும்பத்தி

திணிக்கப்படுகிறது என்பது கேள்விக்குரியது. அத்தகைய திணிப்புகளும், தீர்மானங்களும் மரபு அடிப்படையிலான நம்பிக்கை பழக்கவழக்கங்களால் கட்டிக் காக்கப்படுகின்றன.

மரபுப் பண்பாட்டுக் கோலங்களில் மதங்களின் பங்கும் பெண்களைப் பொறுத்தவரை முக்கியத்துவம் பெறுகின்றன. இந்து மதத்தில் பெண்கள் பற்றிய கற்பு மிக முக்கியம். ஆரம்பத்தில் தந்தையாரைச் சார்ந்தும், பின்னர் கணவனைச் சார்ந்தும் பெண் கற்பிக்கப்படுகிறாள். குடும்ப நிகழ்வுகளிலும் ஆணைச் சார்ந்தே செயற்படவேண்டும் எனவும், தாய்மையும், இல்லறக் கடமைகளுமே மரபு ரீதியான பண்பாகப் போற்றப்படுகின்றன. இந்நிலைகளில் சிறிது மாற்றம் ஏற்படினும், பெண் என்பவள் சமூகத்தில் தனது மதிப்பை இழந்து விடுகிறாள்.

இறுதியாகப் பார்க்குமிடத்து இல்லறம்பேணுதல், கற்பு போற்றுதல், அந்நிய ஆண்களுடன் சரிசமமாக பழகாமல் விலகியிருத்தல், மாமனார், மாமியாருக்குக் கீழ்படிதல், கணவனின் சகோதரர்களுக்கு மதிப்பளித்தல் போன்ற மரபு ரீதியான பண்பாட்டுக் கோலங்கள் பெண்ணைத் தனித்துவம் உடையவளாக, ஆணுக்கு சமமானவளாக, தனித்து இயங்கக்கூடியவளாக, தனக்கென தனித்துவமான கருத்துக்கள் அற்றவளாக பாதுகாப்பு என்ற பெயரில் இல்லறத்தில் சிறை வைத்து அவளுக்கென ஒரு முகத்தை உருவாக்கத் தவறிவிடுகின்றன. எனவே மரபு என்பது விலங்காகப் பெண்களை இறுக்கும்போது, அதை உடைத்தெறிந்துவிட்டு வெளியே வந்து, தம் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் சக்தியாக பெண்கள் உருப்பெற வேண்டும்.

## துணை நூல்கள்

ராஜம் கிருஷ்ணன், 2000, ‘காலந்தோறும் பெண்மை’, தாகம் வெளியீடு, சென்னை.

மைதிலி. சிவராமன், 1997, ‘பெண்ணுரிமை - சில பார்வைகள்’, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

பிரேமா, இரா., 2000, ‘பெண்ணியம்’, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

.................., 2001, ‘பெண் - மரபிலும் இலக்கியத்திலும்’, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

‘தற்கால தமிழ் மரபுத் தொடர் அகராதி’, 1997, மொழி, கலாச்சார வளமேம்பாட்டு அறக்கட்டளை, சென்னை.